[24th March 1961

SRI V. SANKARAN: ஸார், இந்த விண்ணப்பம் செய்திருப்பவர்கள் மூட்டைக்கு 4½ அணா கமிஷன் அல்லது ப்ரோக்கரேஜ் வாங்கும் ஏஜெண்டுகள். அப்படியும் நெல்லிலிருந்து வரி மூலம் வரும் வருமானம் ஒரு சில லட்சம் தான் என்பதையும், முக்கிய உணவுப் பொருளாகிய நெல் லுக்கு இதை எடுத்து விட்டால் ஒரு நல்ல gesture ஆக இருக்கும் என்ற முறையில் சீக்கிரத்தில் எடுத்துவிட முடியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: கனம் அங்கத்தினருக்கு சட்டம் நன்றாகத் தெரியும். இந்த விற்பனை வரி வியாபாரிகளிடமிருந்து வசூலிக்கப்படுகிறதே தவிர இது கன்ஸ்யூமர் டாக்ஸ்தான். ஆகையால் இதை வியாபாரிகள் யாரிடத்தில் விறகிறார்களோ அவர்களிடத்திலிருந்து வாங்கிக் கொடுக்க எந்தவிதக் கஷ்டமும் இருக்காது என்றுதான் நினைக் கிறேன்.

Employees in the Office of Electrical Engineer (General) Madras

* 1062 *Q.*—SRI V. K. KOTHANDARAMAN: கனம் பொது மரா மத்து அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை மின்சார இன்ஜினியர் (பொது) அலுவலகத்தில் பணி யாற்றும் ஊழியர்களுக்கு சென்னை சம்பளக் கமிஷன் சிபார்சிற்கேற்பக் கொடுக்கப்பட வேண்டிய சம்பளத்தின் பாக்கி கொடுக்கப்பட்டிருக்கின்றதா ?

(ஆ) இல்லையெனில், அதன் காரணங்கள் யாவை ?

THE HON. SRI P. KAKKAN: (*a*) & (*b*) Arrears consequent on the fixation of pay in the revised scales sanctioned in July 1960 have been paid to all employees in the Office of the Electrical Engineer (General), Madras.

Certain posts such as Store-keepers, I and II Grades, and members of the provincialised work-charged establishment in the Electrical Engineer (General) Division have not been included in the pay fixation referred to above. The question of revision of scales for these categories was under the consideration of Government and orders have since been issued on 15—3—1961 laying down revised scales for these posts also.

Lower Bhavani and other areas (silting)

* 1063 *Q.*—SRI T. S. RAMASWAMI: Will the Hon. the Minister for Works be pleased to state—

(*a*) the proportion of area and volume silted up in the catchment area of (1) Lower Bhavani Project, (2) Amaravathi Project and (3) Mettur Reservoir; and

(*b*) the steps taken by the Government to remove this accumulating silt periodically?

THE HON. SRI P. KAKKAN: (*a*) There is no possibility of the catchment area of the Projects getting silted up.

(*b*) Does not arise.

24th March 1961]

Sri T. S. RAMASWAMI : Is it not a fact that people who remove the silt, which is being added up every year, are being prosecuted by the department?

The Hon. Sri P. KAKKAN : Not in the reservoir but in the village, some of them are prevented. Now we have issued instructions to issue permits for removing silt. On getting the necessary permission they are allowed to take this silt.

Sri R. SRINIVASA IYER : காச்மெண்ட் ஏரியா என்று கேட்ட கேள்வி தவறுதலாக இருக்கலாம். தண்ணீர் தங்குமிடத்தில் ஸில்ட்-அப் ஆகிறது. ஒரு டாம் 100 வருஷம்தான் இருக்கும் என்று நிர்ணயம் செய்கிறோம், அது ஸில்ட்-அப் ஆகும் என்று சொல்லுகிறார்களே இப்படி ஸில்ட்-அப் ஆகாமல் இருக்க அல்லது ஸில்ட்டை எடுக்க ஏதாவது வழி வகை செய்யப்பட்டிருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri P. KAKKAN : கனம் அங்கத்தினர் கேட்பது சரியான கேள்வி. லோயர் பவானியில் அதை மாதிரி ஸில்ட்-அப் ஆகியிருக்கிறது என்று சொல்லுகிறார்கள். அதை அப்புறப்படுத்த வேண்டுமென்றால் சென்ட்ரல் போர்ட் ஆப் இர்ரிகேஷன் அண்டு பவர் என்ற நிறுவனத்தோடு கலந்து பரிசீலனை செய்துதான் ஏற்பாடு செய்யவேண்டும். பெட் லெவலில் மடை வைத்திருப்பதால் போக வசதி இருக்கிறது. மேட்டூரில் பெட் லெவலில் மடை வைக்கவில்லை. தேவையானால் வைக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. அமராவதியில் பெட் லெவலில் மடை இருப்பதால் அங்கேயும் திறந்துவிட ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது.

Census work (special allowance)

* 1064 *Q.*—Sri M. P. SARATHI : கனம் நிதி அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

'குடியியல் மதிப்பீடு' வேலையில் (Census work) ஈடுபடும் ஆசிரியர்களுக்கு, அந்த வேலைக்கென்று தனியாக ஊதியம் (Special allowance) அளிக்கப்படுகிறதா ? அது உடனுக்குடன் கொடுக்கப்படுகிறதா ?

The Hon. Sri C. SUBRAMANIAM : The teachers who have been appointed as enumerators and supervisors in connection with the 1961 Census are eligible for the honoraria granted by the Government of India. A portion of the amount of honoraria has already been paid to them for the work connected with the house-list operations. The honoraria for the enumeration work will be paid to them on the completion of the work.

Sri V. K. RAMASWAMY MUDALIYAR : May I know whether anything extra is also paid to village officers?

The Hon. Sri C. SUBRAMANIAM : I would like to have notice for that.

Sri S. NAGARAJA MONIGAR : ஸார், குறிப்பிட்ட உபாத்தியாயர்களோ, கிராம அதிகாரிகளோ அதிகப்படி வேலை செய்கிறார்கள் என்ற முறையில் ஊதியம் கொடுக்கப்படுவதானால் எல்லோருக்கும் கொடுக்கப்பட்டு தானே வருகிறது ? இதற்கு முந்தைய சென்ஸஸிலும் கொடுக்கப்பட்டு தானே வந்தது ?

The Hon. Sri C. SUBRAMANIAM : எப்போதும் இருப்பதுபோல் தான்.